www.Padasalai.Net VNR9SS விருதுநகர் மாவட்டம் www.TrbTnpsc.com

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

வகுப்பு - 9

# சமூக அறிவியல்

கால அளவு: 3.00 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள்: 100

## பகுதி - I

**சரியான விடையைத் தேர்வு செய்க:** **14×1=14**

1. மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது ________.
அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி இ) உராங்உட்டான் ஈ) பெருங்குரங்கு

2. சுமேரியன் எழுத்துமுறை ________ ஆகும்.
அ) பிக்டோகிராபி ஆ) ஹைரோகிளிபிக்
இ) சோனோகிராம் ஈ) க்யூனிபார்ம்

3. சேரர்களை பற்றி குறிப்பிடும் கல்வெட்டு எது?
அ) புகளூர் ஆ) கிர்நார்
இ) புலிமான் கோம்பை ஈ) மதுரை

4. மும்மணிகள் (திரிரத்னா) என்ற மூன்று கொள்கைகளை போதியவர் ________.
அ) புத்தர் ஆ) மகாவீரர் இ) லாவோட்சே ஈ) கன்ஃபூசியஸ்

5. கிரேக்கர்களின் மற்றொரு பெயர் ________.
அ) ஹெலனிஸ்டுகள் ஆ) ஹெலனியர்கள்
இ) பீனிசியர்கள் ஈ) ஸ்பார்ட்டன்கள்

6. 'கான்டீட்' என்ற நூல் ________ ஆல் எழுதப்பட்டது.
அ) வால்டேர் ஆ) ரூசோ இ) மாண்டெஸ்கியூ ஈ) டாண்டன்

7. ________ செம்மறி ஆட்டு மேகங்கள் என்று அழைக்கப்படுகிறது.
அ) இடைப்பட்ட திரள் மேகங்கள் ஆ) இடைப்பட்ட படை மேகங்கள்
இ) கார்படை மேகங்கள் ஈ) கீற்றுப்படை மேகங்கள்

8. புவியின் குளிர்ச்சியான பல்லுயிர்த் தொகுதி ________.
அ) தூந்திரா ஆ) டைகா இ) பாலைவனம் ஈ) பெருங்கடல்கள்

9. ஒவ்வொரு ஆண்டும் உலக மக்கள் தொகை தினம் ________ ஆம் நாள் கடைபிடிக்கப்படுகிறது.
அ) ஆகஸ்டு 11 ஆ) செப்டம்பர் 11 இ) ஜூலை 11 ஈ) ஜனவரி 11

10. உலக அமைவிடத்தை கண்டறியும் தொகுதியின் (GPS) பயன்படுத்தப்படும் செயற்கை கோள்கள்
அ) 7 ஆ) 24 இ) 32 ஈ) 64

11. குடவோலை முறையை பின்பற்றியவர்கள் ________.
அ) சேரர்கள் ஆ) பாண்டியர்கள் இ) சோழர்கள் ஈ) களப்பிரர்

12. உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடு
அ) கனடா ஆ) இந்தியா
இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஈ) சீனா

13. அழுத்த குழுக்கள் எனும் சொல்லினை உருவாக்கிய நாடு ________.
அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இங்கிலாந்து
இ) முன்னாள் சோவியத் யூனியன் ஈ) இந்தியா

14. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பொழியும் மாதங்கள்
அ) ஆகஸ்டு - அக்டோபர் ஆ) செப்டம்பர் - நவம்பர்
இ) அக்டோபர் - டிசம்பர் ஈ) நவம்பர் - ஜனவரி

## பகுதி - II

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

**குறிப்பு : வினா எண் 28க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **10×2=20**

15. சிகுரட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.
16. ரோமானிய அடிமை முறையை எழுதுக.
17. மாதிரி சீர்திருத்தம் - குறிப்பு எழுதுக.
18. 'பாஸ்டன் தேநீர் விருந்தின்' முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
19. கொலம்பிய பரிமாற்றம் என்றால் என்ன?
20. ஆழிப்பேரலைகள் என்றால் என்ன?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

VNR9SS

21. மக்கள் அடர்த்தி என்றால் என்ன?
22. தொலை நுண்ணுணர்வு - வரையறு.
23. வேறுபடுத்துக : புவி மாதிரி மற்றும் நில வரைபடம்.
24. அழுத்தக்குழுக்கள் என்றால் என்ன?
25. குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் தேவைப்படுவது ஏன்?
26. கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படும் வரிகள் யாவை?
27. பின்வருவனவற்றை விரிவாக்கம் செய்க.
    1. NNP 2. PCI
28. நமது உடலில் இயங்கும் தொலை உணர்வு உறுப்புகள் யாவை?

## பகுதி - III

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **10×5=50**
**குறிப்பு : வினா எண் 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
    i) ________ என்பது மனிதத் தலையும் சிங்க உடலும் கொண்ட கல்லால் ஆன மிகப்பெரிய உருவம் ஆகும்.
    ii) கங்கைச் சமவெளியில் ________ வேளாண்மைக்கு மாடுகளின் தேவை அவசியமானது.
    iii) ________ என்பது மெதினாவின் முந்தையப் பெயர் ஆகும்.
    iv) பாறைக் குழம்பு ________ காணப்படுகிறது.
    v) பிறச்சார்பு ஊட்ட உயிர்கள் (Heterotrophs) என அழைக்கப்படுபவை ________.
30. சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.
31. புவியியல் சார் கண்டுபிடிப்புகளின் விளைவு குறித்து ஆராய்க.
32. சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் எழுதுக.
33. சிலுவைப் போர்களின் விளைவுகளைக் கூறுக.
34. எரிமலைகளால் உண்டாகும் விளைவுகள் யாவை?
35. மக்கள் தொகை பரவலைப் பாதிக்கும் காரணிகள் யாவை?
36. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
37. பொதுத்துறையும் மற்றும் தனியார் துறையும் வேறுபடுத்துக.
38. நேரடித் தேர்தலின் நிறைகள் மற்றும் குறைகளை விவரி.
39. பணத்தின் செயல்பாடுகளை பட்டியலிடுக.
40. உலக அமைவிடத் தொகுதிகள் (GPS) பயன்களைக் கூறுக.
41. வேளாண்மைக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் யாவை?
42. கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தின் இடைக்கால இந்தியாவின் முக்கிய இடங்களைக் குறிக்கவும்.
    i) லாகூர்
    ii) டில்லி
    iii) வங்காளம்
    iv) மதுரை
    v) அகமதாபாத்

## பகுதி - IV

**கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி:** **2×8=16**

43. அ) மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது - தெளிவுபடுத்துக.

**(அல்லது)**

    ஆ) "தமிழக வரலாற்றில் சோழர்களின் காலம் ஒரு உன்னதக் காலம்" - விளக்கவும்.
44. உலக வரைபடத்தில் குறிக்கவும்:
    i) பசுபிக் பெருங்கடல்
    ii) கங்கை டெல்டா பகுதி
    iii) இங்கிலாந்து
    iv) டென்மார்க்
    v) சீனா
    vi) ஜப்பான்
    vii) அலாஸ்கா வெப்ப நீரோட்டம்
    viii) ப்ரெய்ரி

www.Padasalai.Net